நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

20 June 2015

2015

தரம் : இடைநிலை - மேற்பிரிவு (ஆண்டு 9, 10)
Level : Intermediate - Upper (Year 9 & 10)

வழங்கப்படும் நேரம் : 70 நிமிடங்கள்
(வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

**தரப்பட்ட உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தருக.**

ஆப்பிள் நிறுவனத்தை ஸ்ரீவ் ஜாப்ஸ் (Steve Jobs) உருவாக்கிய கதை மிகவும் சுவாரசியமானது.

தொழில்நுட்ப உலகின் தவப்புதல்வன் என்று புகழப்படும் ஜாப்ஸ், சிறுவனாக இருக்கும் போதே தன் தந்தையுடன் அவர் வீட்டின் கார் தரிப்பிடத்தில் மின்னியல் சாதனங்களுடன் விளையாடிக்கொண்டிருப்பார். ஜாப்ஸுக்கும் தொழில் நுட்பத்துக்குமான உறவு இப்படித்தான் ஆரம்பமானது.

அவருக்கு படிப்பில் மனம் செல்லவில்லை. படிப்பை இடையில் நிறுத்திவிட்டு வீடியோ விளையாட்டுகளைத் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்துவிட்டார். பின்னர் இந்தியாவுக்குச் சென்று சுற்றித்திரிந்தார். பின்னர் ஜாப்ஸ் அமெரிக்கா திரும்பினார். அப்போது அவருக்கு 21 வயது.

அந்த காலத்தில் கணினி என்றால் ஒரு பெரிய வீட்டின் அளவு இருக்கும். கொஞ்சம் தொழில்நுட்ப அறிவு இருந்தால் தான் அதன் பக்கமே போக முடியும். ஜாப்ஸ் தன் நண்பருடன் சேர்ந்து புதிய நிறுவனம் ஒன்றை உருவாக்கினார். தனக்கு விரும்பிய பாடல் ஒன்றின் பெயரான ஆப்பிள் என்பதையே நிறுவனத்துக்கு பெயராக வைத்து விட்டார். இருவரும் கையில் இருந்த பணத்தை முதலிட்டு நிறுவனத்தை துவக்கி கணினி வடிவமைப்பில் ஈடுபட்டனர். ஜாப்ஸ் வீட்டின் வாகனம் நிறுத்துமிடம்தான் அவர்களது அலுவலகம் ஆய்வுகூடம்

முதலில் ஆப்பிள்-1 கணினியை அறிமுகம் செய்தனர். மூன்று ஆண்டுகளில் ஆப்பிள்-2 வெளிவந்தது. ஆப்பிளின் வடிவமைப்பு எளிமையாகவும் பயன்பாட்டுத் தன்மை மிக்கதாகவும் இருந்ததால் விற்பனையும் அதிகரித்தது. இடையே பல்வேறு விதமான தொழிற்போட்டிகள் காரணமாக வியாபாரம் ஏற்ற இறக்கமாகவே இருந்தது. இதனால் நிறுவனத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு ஜாப்ஸ் நிறுவனத்தில் இருந்து விலகி வேறொரு தனி நிறுவனத்தை துவக்கினார். அந்த நிறுவனம் பெரிதாக வெற்றி பெறவில்லை.

இடைப்பட்ட காலத்தில் வின்டோஸ் பிரபலமாகியதால், ஆப்பிள் தடுமாறியது. நட்டத்தில் தள்ளாடும் நிறுவனத்தை தூக்கி நிறுத்தும் கடைசி முயற்சியாக மீண்டும் ஸ்ரீவ் ஜாப்ஸிடமே ஆப்பிள் தஞ்சமடைந்தது. எல்லோரும் கணினிகளிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருந்த காலத்தில் யாருமே எதிர்பாராத வகையில் எம்பி3 (MP3) வடிவில் பாடல்களை கேட்க உதவும் சாதனமான ஐபொட் (iPod) அறிமுகம் செய்யப்பட்டது. அவ்வளவு தான் அமெரிக்காவும் அகில உலகமும் அதன் மூலம் ஆப்பிள் வசமானது. எல்லோரின் காதுகளிலும் ஐபொட் தொங்கியது. இசை உலகில் பெரும் புரட்சியை அது உண்டாக்கியது. அதன் எளிமையும் நேர்த்தியும் MP3 என்றால் ஐபொட் என்று சொல்ல வைத்தன.

எல்லோரும் ஐபொட் பற்றிப் பேசிகொண்டிருந்த போது, செல்போன்கள் செல்லும் திசையை புரிந்து கொண்டு ஐபோனை (iPhone) அறிமுகம் செய்தார் ஜாப்ஸ். தொடு திரை வசதியோடு வந்த அதன் எளிமையும் கணினியின் செயல்திறனும் ஐபோனை மிகப்பிரபலமாக்கியது. புதிய செயலிகள் ஐபோனை அடுத்த மட்டத்திற்குக் கொண்டு சென்றன. அடுத்ததாக ஐபாட் (iPad) எனப்படும் மின்பலகையை அறிமுகம் செய்து ஆப்பிள் வெற்றிக்கொடி நாட்டியது. அப்பிள் குடும்பத்ததைச் சேர்ந்த ஐபோன், ஐபாட் என்பன கணினியுடன் நாம் தொடர்பு கொள்ளும் விதத்தையே மாற்றி அமைத்து தகவல் தொடர்பிலும் புதிய பாதை வகுத்துள்ளன. இதற்காக தான் ஜாப்ஸ் மேதாவி என்று கொண்டாடப்படுகிறார். புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் ஆப்பிள் தலைவர் பதவியில் இருந்து விலகிய ஸ்டீவ் ஜாப்ஸ், குறுகிய காலத்தில் மீளா துயிலில் ஆழ்ந்துவிட்டார். அவரது மறைவு தொழில்நுட்ப உலகையே உலுக்கிவிட்டது. ஆனால் அவர் உண்டாக்கிய கணினிப் புரட்சி என்றென்றும் நிலைத்து நிற்கும்.

நன்றி: விகடன் 06/10/2011

1. ஜாப்ஸின் இளைமைக் காலத்தைச் சரியாகக் குறிக்கும் மரபுத்தொடர்:

a) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா

b) விளையும் பயிரை முளையில் தெரியும்

c) இளைமையில் கல்வி சிலையில் எழுத்து

d) இவை எல்லாம் பொருத்தமானவை

2. ஆரம்ப காலத்தில் ஆப்பிளின் வெற்றிக்குக் காரணம்:

a) அது தயாரித்த கருவிகளின் எளிமையும் பயன்பாடும்

b) அவற்றின் மலிவான விலை

c) அவற்றிற்கு வேறு போட்டிகள் இல்லை

d) அவை விலையுயர்ந்த பொருட்கள்

3. ஆப்பிள் நிறுவனம் கணினி உலகில் ஏற்படுத்திய அதீத வளர்ச்சிக்குக் காரணம்

a) ஆப்பிள் நிறுவனத்தின் ஆரம்பகால தயாரிப்புகள்

b) பாடல்கள் கேட்கும் கருவிகளின் கண்டுபிடிப்பு

c) அண்மைக் காலக் கண்டுபிடிப்புகள்

d) அதன் நிறுவனரின் தொலை நோக்குப் பார்வை

4. ஐ.போன் சந்தையில் முத்திரை பதித்ததற்குக் காரணம்

a) அதன் எளிமையான வடிவமைப்பு

b) அதன் செயலி

c) அதன் தொடு திரை

d) இவை எல்லாம்

5. ஸ்ரீவ் ஜாப்ஸ் மேதாவி எனப் போற்றப்படுவதற்குக் காரணம்

a) அவர் சிறுவயதில் குறும்புக்காரனாக இருந்தமையினால்

b) அவர் ஆப்பிள் நிறுவனத்தை இலாபத்தில் நடாத்தியமையால்

c) கணினியுடன் நாம் தொடர்பு கொள்ளும் விதத்தை ஆப்பிள் கருவிகள் மாற்றியமைத்தமையால்

d) ஆப்பிள்-1 கணினியை அவர் உருவாக்கியமையால்

**வினா: 6-10 ஸ்ரீவ் ஜாப்ஸ் தனது வாழ்க்கையில் வெளிக்காட்டிய குணவியல்புகள் ஐந்தை வரிசைப்படுத்துக.**

6. ________________

7. ________________

8. ________________

9. ________________

10. ________________

**வினாக்கள்: 11-14 பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

| | |
|---|---|
| a) சிலப்பதிகாரம் | b) இராமாயணம் |
| c) பாஞ்சாலி சபதம் | d) மகாபாரதம் |

11. முத்தமிழ்க் காப்பியம் என்று போற்றப்படுவது
12. கர்ணன் என்ற பாத்திரம் இடம்பெறும் காப்பியம்
13. பாரதியார் பாடியது

14 கும்பகர்ணன் பாத்திரம் இடம்பெறும் காப்பியம்

**வினாக்கள்: 15-17 மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

| | |
|---|---|
| a) தமிழ் முரசு அவுஸ்திரேலியா | b) தமிழ் ஓசை |
| c) தாயகம் | d) நீர்த்திரை |

15. சிட்னியில் இருந்து வெளிவரும் மாத சஞ்சிகை
16. அவுஸ்திரேலியாவில் இருந்து வெளிவரும் இணைய சஞ்சிகை
17. சௌந்தரி கணேசனின் கவிதைத் தொகுதி

**வினாக்கள்: 18-20 பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

| | |
|---|---|
| a) அச்சு ஊடகம் | b) மின் ஊடகம் |
| c) சமூக ஊடகம் | d) மடிக்கணினி |

18. தமிழ்நாட்டின் தினமணி நாளிதழ்
19. முகநூல்
20. LAPTOP என்பதன் தமிழ்ப் பதம்

**வினாக்கள்: 21-25: மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

a) அவுஸ்திரேலிய மருத்துவ நிதியம்
b) நி.ச.வே தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
c) சிட்னி தமிழ் அறிவகம்
d) அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்

21. தமிழ்ப் பாடநூல்களை அவுஸ்திரேலியாவில் வெளியிடுவோர்
22. முத்தமிழ் மாலை எனும் கலை நிகழ்ச்சியை வருடந்தோறும் நடத்துவோர்
23. யாழ். நூலகம் எரிக்கப்பட்டதனை நினைவு கூர்ந்து கொடிதினம் அனுட்டிப்போர்
24. இனிய தமிழ் மாலை எனும் கலை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்பவர்கள்
25. தமிழ்ப் போட்டிகளை அவுஸ்திரேலியாவில் தேசிய அளவில் நடாத்துவோர்.

**வினாக்கள் 26-30: மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

26. முத்தமிழ் என்று கூறப்படுபவை
   a) இயல், இசை, நடனம்
   b) இயல், பாட்டு, நடனம்
   c) இயல், இசை, நாடகம்
   d) இயல், இசை, கூத்து

27. சங்க காலத்தில் உழவுத்தொழிலைச் செய்தவர்கள் வாழ்ந்த நிலம்
   a) குறிஞ்சி
   b) முல்லை
   c) மருதம்
   d) நெய்தல்

28. ஐஞ்சிறு காப்பியங்கள்
a) சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி
b) சிலப்பதிகாரம், நீலகேசி, உதயணகுமாரகாவியம், நாககுமாரகாவியம், யசோதராகாவியம்
c) மணிமேகலை, நீலகேசி, உதயணகுமாரகாவியம், நாககுமாரகாவியம், யசோதராகாவியம்
d) சூளாமணி, உதயணகுமாரகாவியம், நாககுமாரகாவியம், யசோதராகாவியம்

29. பெண்களைக் குறிக்கும் சொல் அல்லாதது

a) மங்கையர்

b) ஆடவர்

c) அரிவையர்

d) மகளிர்

30. குணதிசையில் கதிரவன் உதயமானான். இவ்வாக்கியத்தில் உள்ள குணதிசை என்பது

a) கிழக்குத்திசை

b) மேற்குத்திசை

c) தெற்குத்திசை

d) வடக்குத்திசை

**வினாக்கள் 31-40: பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. "திக்குத் தெரியாத காட்டில் உன்னைத் தேடி அலைகின்றேன்" என்ற பாரதியார் பாடல் வரிகளில் திக்கு என்ற சொல் குறிப்பது

a) பறவையை

b) மிருகத்தை

c) திசையை

d) வெளிச்சத்தை

32. "உளிதாங்கும் கற்கள் தானே
மண்மீது சிலையாகும்..." என்ற பாடல் வரிகளில் ஒருவருடைய தொழில் குறிப்பிடப்படுகிறது. அந்தத் தொழிலைப் புரிபவர் யார்?

a) ஓவியன்

b) சிற்பி

c) கவிஞன்

d) பாடகன்

33. எழிலி நவநாகரிக உடை அணிந்து பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு வந்தாள். இவ்வாக்கியத்தில் உள்ள நவ என்பதன் பொருள்

a) புதிய

b) பழைய

c) ஒன்பது

d) எட்டு

34. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பாடல் வரியில் உள்ள கேளிர் என்பதன் கருத்து

a) சகோதரர்

b) பகைவர்

c) விருந்தினர்

d) உறவினர்

35. புலவர்கள் சங்கம் அமைத்து தமிழ் மொழியை வளர்த்த காலம்

a) சங்ககாலம்

b) சங்கமருவியகாலம்

c) பல்லவர்காலம்

d) சோழர்காலம்

**வினாக்கள் 36-40: பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

36. காலத்தால் முந்திய தமிழ் இலக்கண வடிவம்

a) கவிதை

b) சிறுகதை

c) நாவல்

d) நாடகம்

37. தமிழ் இலக்கிய வகைகள்

a) கவிதை, நடனம், நாவல், நாடகம்

b) கவிதை, நடனம், நாவல், சிறுகதை

c) கவிதை, சிறுகதை, நாவல், நாடகம்

d) உரைநடை, சிறுகதை, நாவல், நாடகம்

38. அசோகவனத்தில் சீதையைக் கண்ட அனுமான் இராமனால் கொடுக்கப்பட்ட கணையாழியை சீதையிடம் ஒப்படைத்தான். கணையாழி என்பது

a) வளையலைக் குறிக்கின்றது

b) சிலம்பைக் குறிக்கின்றது

c) அட்டியலைகட குறிக்கின்றது

d) மோதிரத்தைக் குறிக்கின்றது

39. கண்ணகியின் வாழ்க்கையைக் கூறுகின்ற காப்பியம்

a) சிலப்பதிகாரம்

b) மணிமேகலை

c) சீவகசிந்தாமணி

d) வளையாபதி

40. ”மெய்த்திருப்பதம் மே என்ற போதிலும்

இத்திருத் துறந்து ஏகென்ற போதிலும்

சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை

ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்” என்ற கம்பரின் கவிதை வரிகளில் உள்ள சித்திரத்தில் என்பதன் பொருள்

a) சிற்பத்தில்

b) ஓவியத்தில்

c) புகைப்படத்தில்

d) கல்வெட்டில்

**வினாக்கள: 41-45: பின்வரும் உரைப்பகுதில் விடுப்பட்ட சொற்களை பூரணப்படுத்துக.**

| | | | | |
|---|---|---|---|---|
| போற்றும் | நெருக்கமான | அநாகரீகம் | வயதான | அவதூறு |

மேலைத்தேய நாடுகளில் தனி மனித உரிமையப் பெரிதும் 41.................................... பண்பு அதிகரித்து வருகிறது. குடும்பங்களிலும் கூட இந்த உரிமை பற்றி இப்போது அதிகம் பேசப்படுகிறது. எவ்வளவு 42.......................................... உறவுகளுக்கிடையிலும் கூட ஒரு வேலி

அல்லது திரை இருப்பதாக பலரும் கருதுகின்றனர். மேலைத்தேய சமூகங்களில் ஒருவர் தொடர்பான விவகாரத்தை சம்பந்தமேயில்லாமல் இன்னொருவர் பேசுவது 43.................................................. மட்டுமன்றி எல்லை மீறும் பட்சத்தில் அது சட்டவிரோதமானது என்ற நிலைப்பாடும் உண்டு. இந்தத் 44...................................................... உரிமை பற்றிய விழிப்புணர்வின் உச்சமாக 45......................................................... தம்பதிகள் கூட விவாகரத்துப் பெற்றுக்கொண்டு தனித்தனியாக வாழ முற்படுகின்றனர்.

## 46. எழுத்து ஆக்கம்

உமது நண்பர் தமிழ்ப் பாடசாலைக்கு வருவதில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. அவரை தமிழ்ப் பாடசாலைக்கு வரத் தூண்டும்படி ஆலோசனை கூறி 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

உங்கள் தமிழப் பாடசாலையில் ஏற்பட்ட ஒரு மறக்க முடியாத அனுபவத்தை 100 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

# 2015